# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1698 - 2011 මාර්තු මස 18 වැනි සිකුරාදා - 2011.03.18

*1698 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 348 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 353 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்****. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2011, மாச்சு மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2011, மாச்சு மாதம் 11 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.*

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

*4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

**5. யுத்த சேவைச் சலுகை :**

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

*6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந்தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி - களுத்துறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்கள் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2011, சித்திரை மாதம் 18 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை.
2011, மாசி மாதம் 23 ஆந் திகதி.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| களுத்துறை | ஹொரணை | குளுப்பன பகுதியில் ரைகம் கோரளை பிரிவில் மேலதிக விவாகப் (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், களுத்துறை |

3-465

---

திருத்தம்

## பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

சமுர்த்தி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

### இணைந்த சாரதிகள் சேவையில் வகுப்பு III இல் உள்ள பதவிகளுக்கு ஆட்சேர்த்துக் கொள்ளுதல் - 2010

சமுர்த்தி ஆணையாளர் நாயகம் திணைக்களத்தில் இணைந்த சாரதிகள் சேவையில் வகுப்பு III இல் நிலவும் 04 வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பில் 2010.12.24 ஆந் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் சம்பந்தமானது.

2. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2011, ஏப்பிறல் மாதம் 8 ஆந் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதுடன், அதற்கிணங்க உரிய விண்ணப்பங்கள் 2011, ஏப்பிறல் மாதம் 8 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் இலக்கம் 17, பாண்ஸ் இடம், கொழும்பு 07 என்ற முகவரியில் அமைந்துள்ள சமுர்த்தி ஆணையாளர்

நாயகம் திணைக்களத்தின் சமுர்த்தி ஆணையாளர் நாயகத்திற்குக் கிடைக்கும்வண்ணம் பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கிவரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் " இணைந்த சேவை சாரதிகள் பதவிக்கான ஆட்சேர்ப்பு - 2010" எனத் தெளிவாக எழுதப்படுதல் வேண்டும். இந்த இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

சமுர்த்தி ஆணையாளர் நாயகம்,
சமுர்த்தி ஆணையாளர் நாயகம் திணைக்களம்.

சமுர்த்தி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
பாண்ஸ் இடம்,
கொழும்பு 7.

3-431

---

## சுதேச மருத்துவ அமைச்சு

### ஆயுர்வேத சேவைக்கான ஆட்சேர்ப்பு

ஆயுர்வேத திணைக்களத்தின் மருத்துவ உத்தியோகத்தர் பிரிவின் ஆரம்பத் தரத்தைச் சேர்ந்த மருத்துவ உத்தியோகத்தர் பதவிக்காக 2011.04.15 ஆந் திகதியில் கீழே குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவங்கள் கீழே காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக ஏ4 அளவிலான கடதாசியில் தயாரிக்கப்பட்டு 2011.04.15 ஆந் திகதியோ அதற்கு முன்னராகவோ "ஆயுர்வேத ஆணையாளர், ஆயுர்வேத திணைக்களம், பழைய கொட்டாவ வீதி, நாவின்ன, மஹரகம" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் இட்டு அனுப்பப்படும் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவைப் பதவிகள்" எனக் குறிப்பிடுக.

1. **சம்பள அளவுத் திட்டம்**.- (i) பட்டதாரிகளுக்காக பொ. நி. சு. 6/2006 இன்படியான மாதாந்த சம்பள அளவுத்திட்டம்.- ரூ. 25,515-4x645-8x650-16x1,050-50,095 (SL2-2006)

(ii) ஆரம்ப தரத்திற்கான சம்பள அளவுத்திட்டம்.- ரூ. 26,160-2x645-27,450 (SL2-2006)

2. **வயதெல்லை**.- 2011.04.15 ஆந் திகதியன்று வயது 40 வருடங்களுக்கு மேற்பட்டதாக இருத்தல் ஆகாது.

3. **கல்வி மற்றும் பிற தகைமைகள்**.- (அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் ;

அத்துடன்

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் ஆயுர்வேத, சித்த அல்லது யுனானி மருத்துவம் பற்றிய ஐந்தாண்டுப் பாடநெறியைப் பயின்று பெற்ற பட்டத்துக்குப் பின்னர் ஒரு வருட உள்ளகப் பயிற்சியை நிறைவுசெய்து ஆயுர்வேத மருத்துவ மன்றத்தில் பதிவுசெய்துள்ள மருத்துவராக இருத்தல்

அத்துடன்

(இ) சிறந்த குணநலன் கொண்டவராகவும் உடல் மற்றும் உளச் சுகாதாரம் மிக்கவராகவும் இருத்தல் வேண்டும்.

4. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்**.- இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதிய உரித்துடையது. அநாதைகள், விதவைகள்/அநாதைகள், விதுரர்கள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகை செலுத்துதல் வேண்டும்.

5. **பதவியுயர்த்துதல்**.- ஆரம்ப தரத்தின் பதவிகளுக்குச் சேர்த்துக் கொண்ட பின்னர் இலங்கை ஆயுர்வேத சேவைப் பிரமாணக் குறிப்பில் காட்டப்பட்டுள்ள சேவை நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைவாகவே பதவியுயர்வு வழங்கப்படும்.

**குறிப்பு**.- 2011.04.15 ஆந் திகதியாகும்போது ஆட்சேர்ப்பு நடைமுறையில் காட்டப்பட்டுள்ள தகைமைகள் அனைத்தையும் பூர்த்திசெய்துள்ளவரும், இறுதிப் பட்டப் (ஆயுர்வேத, சித்த, யுனானி) பரீட்சையில் சித்தியடைந்துள்ளவரும், இற்றைவரை அரச சேவையில் ஆயுர்வேத மருத்துவர் நியமனம் கிடைக்காதவருமான ஆரம்ப அணியில் பதிவுசெய்துள்ள மருத்துவர்கள் அனைவரும் இறுதிப் பட்டப் பரீட்சையில் ஒவ்வொருவரும் பெற்றுள்ள புள்ளிகளின் வரிசைக் கிரமத்தை அடிப்படையாகக் கொண்ட திறமை வரிசைப்படி அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கையில் நிலவுகின்ற வெற்றிடங்களுக்காக சேர்த்துக் கொள்ளப்பட்ட பின்னர், தொடர்ந்து வருகின்ற ஆண்டுகளில் ஏனைய அணிகளில் ஆயுர்வேத/சித்த/யுனானி பட்டதாரி மருத்துவர்கள் அவர்கள் பரீட்சையில் சித்தியடைந்த வருட வரிசைக்கிரமப்படி மேலே குறிப்பிட்ட திறமை அடிப்படையிலேயே சேர்த்துக்கொள்ளப்படுவர்.

6. விண்ணப்பதாரிகள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையொன்றினால் நடத்தப்படுகின்ற நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத் தப்பட்டு தகைமைகள் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் தெரிவுசெய்யப் படுவர்.

7. தெரிவுசெய்யப்படுகின்ற பரீட்சார்த்திகள் தீவின் எந்தவொரு பகுதியிலும் சேவையாற்றத் தயாராக இருத்தல் வேண்டும்.

8. கீழே குறிப்பிட்ட ஆவணங்கள் அனைத்தையும் நேர்முகப் பரீட்சை சபை கோருகின்ற வேளையில் சமர்ப்பிக்க விண்ணப்பதாரிகள் தயாராக இருத்தல் வேண்டும் :-

(1) தேசிய அடையாள அட்டை ;

(2) பிறப்புச் சான்றிதழ் ;

(3) பட்டப்படிப்புச் சான்றிதழ் ;

(4) ஆயுர்வேத மருத்துவ மன்றத்தின் பதிவுச் சான்றிதழ் ;

(5) பிரதேச செயலாளரால் மேலொப்பமிடப்பட்ட கிராம அலுவலரின் சான்றிதழ்.

9. அரசாங்க அலுவலர்களால் அனுப்பிவைக்கப்படும் விண்ணப்பப் பத்திரங்கள் தமது திணைக்களத் தலைவரூடாக மாத்திரம் சமர்ப்பிக்கப் படல் வேண்டும். 2011.04.15 ஆந் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்பத்திரம் அல்லது அதனோடு தொடர்புடைய ஆவணங்கள் அனைத்தையும் ஆயுர்வேத ஆணையாளரது உத்தியோகபூர்வ பெயருக்கன்றி வேறு எந்தவோர் அலுவலரதும் பெயருக்கு அனுப்பி வைக்கப்படலாகாது.

10. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி I : தொகுதி (IIஅ) வின் தொடக்கத்தில் காட்டப்பட்டுள்ள அரச சேவை அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள் பிரகாரம் விண்ணப்பித்துள்ள வர்களும் இதற்காக மீண்டும் விண்ணப்பிக்க வேண்டும்.

11. இவ்வறிவித்தலின் பிரகாரம் ஆட்சேர்ப்புடன் தொடர்புடைய பணிகள் சார்ந்த நியமன அதிகாரியின் தீர்மானமே இறுதியானதாகும்.

பி. டி. தஹநாயக்க,
செயலாளர்,
சுதேச மருத்துவ அமைச்சு.

4 ஆவது மற்றும் 5 ஆவது மாடி,
சுதேச மருத்துவ அமைச்சு,
ஆயுர்வேத வைத்தியசாலை வளவு,
கொழும்பு 8.
2011.02.28.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**ஆயுர்வேத திணைக்களம்**

[ ]
(அலுவலகப் பயன்பாட்டிற்கு மட்டும்)

ஆயுர்வேத திணைக்கள வைத்திய அலுவலர் வகுதியின் ஆரம்ப தர வைத்திய அலுவலர் பதவி

1. (i) (அ) முதலெழுத்துடனான பெயர் :----.
(ஆ) முதலெழுத்துக்களுடனான பெயர் (ஆங்கிலத்தில்) :----.

(ii) (அ) முதலெழுத்தைக் குறிக்கும் பெயர் :----.
(ஆ) முதலெழுத்தைக் குறிக்கும் பெயர் (ஆங்கிலத்தில்) :----.

2. (i) நிரந்தர முகவரி (தபால் முகவரி) :----.
(ii) தொலைபேசி இலக்கம் :----.

3. (i) பிறந்த திகதி :
ஆண்டு [ ][ ][ ][ ] மாதம் [ ][ ] திகதி [ ][ ]

(ii) 15.04.2011 அன்று வயது :
வருடங்கள் [ ][ ] மாதங்கள் [ ][ ] நாட்கள் [ ][ ]

4. பால் :
பெண் [ ] ஆண் [ ]

(பொருத்தமான கூட்டில் X அடையாளம் இடுக.)

5. திருமணமானவர் அல்லது திருமணமாகாதவர்:-

திருமணமானவர் [ ] திருமணமாகாதவர் [ ]

(பொருத்தமான கூட்டில் X அடையாளம் இடுக.)

6. இலங்கைப் பிரசையா ? :----.

7. இனம் :----.

8. வதிவிடத்திற்குரிய-

மாகாணம் :----.
மாவட்டம் :----.
பிரதேச செயலாளர் பிரிவு :----.

9. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-
[ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

10. கல்வித் தகைமைகள் :
பட்டம் :

BAMS [ ] BUMS [ ] BSMS [ ]

(பொருத்தமான கூட்டில் X அடையாளம் இடுக)

(அ) பல்கலைக்கழகம்/ நிறுவனம் :----.
(ஆ) பட்டம் பெற்ற திகதி :----.
(இ) தரம் :----.
(ஈ) உள்ளகப் பயிற்சிக் காலம் :----.

11. ஆயுர்வேத வைத்திய சபையில் பதிவுசெய்தது பற்றிய விபரங்கள் :-

(அ) இலக்கம் :----.
(ஆ) ஆண்டு :----.

இவ்விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மை யானவை என்றும் சரியானவை என்றும் நான் இத்தால் உறுதி செய்கின்றேன். இங்கு கொடுக்கப்பட்ட விபரங்கள் உண்மையற்றவை எனவும் பிழையானவை எனவும் நியமன அதிகாரியினால் அறியப்பட்டால் நான் எவ்வித நட்டஈடும் இன்றி இச்சேவையிலிருந்து முடிவுறுத்தப் படுவேன் என்பதை அறிவேன்.

------------------------------,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

விண்ணப்பதாரர் அரசாங்க சேவையிலுள்ளவராயின் திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :

மேற்குறித்த விபரங்கள் சரியானவை என்றும் அவரின் வேலை மற்றும் நடத்தை ................ எனவும் அவரை தற்போதுள்ள பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

-------------------------------,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்,
பதவிப்பெயரும்.

திகதி :----.

3-472

## நீதிச்சேவை ஆணைக்குழு

கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசங்களில் நிலவும் காதி வெற்றிடங்களுக்கு ஆட்களைச் சேர்த்துக்கொள்வதற்காக முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (அத்தியாயம் 115) கீழ் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழே குறிக்கப்படும் தகைமைகளைக் கொண்டவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

முஸ்லிம் சமயத்தைச் சார்ந்த ஆண் விண்ணப்பதாரர் ஒருவர் பல்கலைக்கழகப்பட்டம் பெற்றுள்ள ஒருவராக அல்லது முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் சான்றிதழ் பெற்றுள்ள மௌலவி ஒருவராக அல்லது கல்வித் திணைக்களத்தால் வழங்கப்பட்ட அல்- ஆலிம் சான்றிதழ் பெற்றுள்ள ஒருவராக அல்லது சட்டத்தரணி ஒருவராக அல்லது அதற்குச் சமமான தொழில்சார் தகைமையுடைய ஒருவராக அல்லது ஓய்வுபெற்ற பதவிநிலை தரத்திலான உத்தியோகத்தர் ஒருவராக இருத்தல் வேண்டும். தற்போது அரச சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் இதற்கு விண்ணப்பிக்கத் தகைமையற்றவர்களாவர்.

விண்ணப்பதாரர் இஸ்லாம் மார்க்கத்தைப் பற்றி ஒழுகுபவராகவும், 40 வயதிற்கு மேற்பட்டவராகவும், நல்ல ஒழுக்கமுள்ளவராகவும் இருக்கவேண்டியதோடு, முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் மற்றும் விசேடமாக முஸ்லிம் சட்டம் பற்றிய நல்ல அறிவுடையவராகவும், சமூகத்தில் நல்ல வரவேற்பும் மதிப்புமுடையவராகவும், விவாகமான ஒருவருமாக இருத்தல் வேண்டும்.

தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்படுகின்ற காலஎல்லைக்கு நியமனம் செய்யப்படுவார்.

காதியாக நியமிக்கப்படுபவர் அப்பிரதேசத்திற்குள் நிரந்தரமாக வசிப்பவராக இருப்பது சட்டரீதியான அவசியமாகும்.

காதி ஒருவருக்கு ரூபா 6,000 மாதாந்தக் கொடுப்பனவுக்கு மேலதிகமாக உதவியாளர் சேவை, எழுதுகருவிகள் மற்றும் அஞ்சல் செலவுக்காகவும் மாதாந்தம் ரூபா 5,000 கொடுப்பனவொன்றும் வழங்கப்படும்.

மாதிரி விண்ணப்பப்படிவத்தினை நீதிச்சேவை ஆணைக்குழு செயலகத்தில் பெற்றுக்கொள்வதோடு பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "காதிப்பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிட்டு 2011 ஆண்டு ஏப்பிறல் மாதம் 15 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ எனக்குக் கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

பிரியந்த த சில்வா,
செயலாளர்,
நீதிச் சேவை ஆணைக்கு.

நீதிச் சேவை ஆணைக்குழு செயலகம்,
கொழும்பு 12,
2011, மாச்சு 03.

### அட்டவணை

| | |
|---|---|
| 1. அக்குறணை | கண்டி மாவட்ட, அக்குறணை பிரதேச செயலாளர் பிரிவுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாக நீக்கச் சட்டம் (115 ஆம் அத்தியாயம்) இன்படி திருத்தப்பட்டவாறு நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது. |
| 2. கண்டி | கண்டி மாவட்டத்தின் கடவத்சத்தர, ஹங்கவட்ட மற்றும் பஹத்தஹேவாஹட்ட இறைவரிப் பிரிவுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாக நீக்கச் சட்டம் (115 ஆம் அத்தியாயம்) படி திருத்தப்பட்டவாறு நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது. |
| 3. கிண்ணியா | திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா உதவி அரச அதிபர் பிரிவுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாக நீக்கச் சட்டம் (115 ஆம் அத்தியாயம்) படி திருத்தப்பட்டவாறு நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது. |

| | |
|---|---|
| 4. கொடியார்பற்று (மூதூர்) | திருகோணமலை மாவட்டத்தின் கொடியார்பற்று இறைவரிப் பிரிவுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாக நீக்கச் சட்டம் (115 ஆம் அத்தியாயம்) படி திருத்தப்பட்டவாறு நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது. |
| 5. மண்முனைப்பற்று (காத்தான்குடி) | மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனைப்பற்று வடக்கு, தெற்கு ஒறுவில் மற்றும் போறதீவு இறைவரிப் பிரிவுக்கான காதிப் பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாக நீக்கச் சட்டம் (115 ஆம் அத்தியாயம்) படி திருத்தப்பட்டவாறு நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது. |
| 6. மாத்தளை | மாத்தளை நீதிப் பிரிவுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாக நீக்கச் சட்டம் (115 ஆம் அத்தியாயம்) படி திருத்தப்பட்டவாறு நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது. |
| 7. நிந்தவூர்பற்று | நிந்தவூர் உதவி அரச அதிபர் பிரிவுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாக நீக்கச் சட்டம் (115 ஆம் அத்தியாயம்) படி திருத்தப்பட்டவாறு நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது. |
| 8. பாணந்துறை | பாணந்துறை நீதிப் பிரிவுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாக நீக்கச் சட்டம் (115 ஆம் அத்தியாயம்) படி திருத்தப்பட்டவாறு நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது. |
| 9. யட்டிநுவர | கண்டி மாவட்ட யட்டிநுவர இறைவரிப் பிரிவுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாக நீக்கச் சட்டம் (115 ஆம் அத்தியாயம்) படி திருத்தப்பட்டவாறு நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது. |
| 10. அக்கரைப்பற்று | அம்பாறை மாவட்ட அக்கரைப்பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாக நீக்கச் சட்டம் (115 ஆம் அத்தியாயம்) படி திருத்தப்பட்டவாறு நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது. |
| 11. அவிசாவளை | அவிசாவளை நீதிப் பிரிவுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாக நீக்கச் சட்டம் (115 ஆம் அத்தியாயம்) படி திருத்தப்பட்டவாறு நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது. |
| 12. காலி | காலி நீதிப் பிரிவுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாக நீக்கச் சட்டம் (115 ஆம் அத்தியாயம்) படி திருத்தப்பட்டவாறு நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது. |
| 13. களுத்துறை | களுத்துறை நீதிப் பிரிவுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாக நீக்கச் சட்டம் (115 ஆம் அத்தியாயம்) படி திருத்தப்பட்டவாறு நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது. |
| 14. மாஹோ | மாஹோ, வாரியப்பொல, நிக்கவரட்டிய, கல்கமுவ, அபான்பொல, ஜகமா, பாலுநாவல, வல்பாலுவ, கணுகெட்டிய, அபுக்ககம உள்ளிட்ட ஏனைய கிராமங்கள் உள்ளடங்கலாக மேற்படி பிரிவுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாக நீக்கச் சட்டம் (115 ஆம் அத்தியாயம்) படி திருத்தப்பட்டவாறு நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது. |
| 15. பாணமபற்று (பொத்துவில்) | பாணமபற்று (பொத்துவில்) இறைவரிப் பிரிவுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாக நீக்கச் சட்டம் (115 ஆம் அத்தியாயம்) படி திருத்தப்பட்டவாறு நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது. |
| 16. குளியாப்பிட்டி | குளியாப்பிட்டி, திவுரும்பொல, ஆரியாம, கீனியாம, ஹெட்டிபொல பன்னல பண்டாரகொஸ்வத்த, அலபொடகம, வம்மான, நாரம்மல, தம்பதெனிய, கொரம்பாவ, அதுன்கஹகொட்டுவ, ககுணுகொல்ல, கொப்பைகனே, அரக்யால மற்றும் இப்பிரதேசத்திற்குட்பட்ட ஏனைய சிறிய கிராமங்கள் உள்ளடங்கலாக மேற்படி பிரிவுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாக நீக்கச் சட்டம் (115 ஆம் அத்தியாயம்) படி திருத்தப்பட்டவாறு நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது. |

| | |
|---|---|
| 17. பஹத்த ஹேவாஹெட்ட | கண்டி மாவட்டத்தின் பஹத்த ஹேவாஹெட்ட பிறப்பு, இறப்பு மற்றும் விவாக பதிவுப் பிரிவுக்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாக நீக்கச் சட்டம் (115 ஆம் அத்தியாயம்) படி திருத்தப்பட்டவாறு நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது. |
| 18. மேமன் சமூகம் | மேமன் சமூகத்திற்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாக நீக்கச் சட்டம் (115 ஆம் அத்தியாயம்) படி திருத்தப்பட்டவாறு நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது. |
| 19. போரா சமூகம் | போரா சமூகத்திற்கான காதிப்பதவிக்கு முஸ்லிம் விவாக, விவாக நீக்கச் சட்டம் (115 ஆம் அத்தியாயம்) படி திருத்தப்பட்டவாறு நீதிச்சேவை ஆணைக்குழு விண்ணப்பங்களைக் கோருகின்றது. |

3-524

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## கால்நடைவள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு

*கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்*

### இலங்கை கால்நடை வள அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் II ஆம் வகுப்பு 'ஆ' தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2010

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்ப சேவையின் II ஆம் வகுப்பு "ஆ" தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சையின் பொருட்டு கால்நடை உற்பத்தி, சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **பரீட்சை.**- இப்பரீட்சை 2011, வைகாசி மாதத்தில் கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் கண்டியில் நடாத்தப்படும். இப்பரீட்சையினை ஒத்திப்போடுவதற்கும் அல்லது இரத்துச் செய்வதற்கும் கால்நடை உற்பத்தி, சுகாதார பணிப்பாளர் நாயகத்திற்கு அதிகாரம் உண்டு.

3. **சேவை நிபந்தனைகள்.**- அரசாங்க சேவையில் நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும் இங்கு கீழ் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கும் அமைவாக கால்நடை வள அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் II ஆம் வகுப்பு "ஆ" தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும் :-

(i) தீவின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு உட்படுத்தப்படுவார் என்ற நிபந்தனையின் பேரிலேயே உத்தியோகத்தர் நியமிக்கப்படுவார்.

(ii) ஆட்சேர்ப்பு செய்யப்படும் உத்தியோகத்தர்கள் மூன்று வருட தகுதிகூர் காலத்திற்கு உட்படுதல் வேண்டும். அரசாங்க சேவைப்பதவி ஒன்றில் உறுதிப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படுவாரேயாயின் அது தொடர்பில் நியமனமானது ஒரு வருட பரீட்சார்த்த காலப்பகுதிக்கு உட்பட்டதாக அமையும். ஆட்சேர்ப்பு செய்யப்படும் உத்தியோகத்தர்கள் அத்தகைய பதவியில் உறுதிப்படுத்துவதற்கு முன்னர் விதித்துரைத்த முதலாவது வினைத்திறன் தடைப்பரீட்சையில் சித்தி எய்துதல் வேண்டும்.

(iii) ஆங்கில மொழி மூலத்தில் சேவைக்கு ஈர்ப்பு செய்யப்படும் உத்தியோகத்தர்கள் பதவியில் நிரந்தரம் செய்கையில் ஏனைய விடயங்களுக்கும் மேலாக தகுதிகூர் காலத்திற்குள் அரச கரும மொழியில் சிங்களம் அல்லது தமிழ் மொழியில் இயலுமையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அரச மொழிக் கொள்கையில் இருந்து விடுவிப்புச் செய்வதாயின் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சிங்களம்/ தமிழ் பாடத்தில் சித்தி அடைந்துள்ளதாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும் பெறுபேற்றுச் சான்றிதழின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி அல்லது பெறுபேற்றுச் சான்றிதழின் மூலப்பிரதி சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(iv) நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்புரைக்கும் தாபன விதிக்கோவையின் ஒழுங்குவிதிகளுக்கும் நிதிப்பிரமாணத்திற்கும் அரசாங்கத்தால் அவ்வப்போது பிறப்பிக்கப்படுகின்ற பிரமாணங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் அமைச்சு மற்றும் திணைக்களம் என்பவற்றின் பணிப்புரைகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

4. **சம்பளத்திட்டம்.**- MT-2-2006 A – ரூபா 14,570 – 10 x 170 – 11 x 180 – 6 x 240 – 14 x 320 – ரூபா 24,170. (பொ. நி. சு. 6/2006 (IV) இற்கு அமைய மாதாந்தம்)

இச்சம்பளத் திட்டத்தில் ரூபா 14,570-10 x 170-16,270 சம்பளப் படிமுறையும் இத்தரத்திற்கு உரியதாகும்.

வகுப்பு II "ஆ" வில் உள்ள உத்தியோகத்தர்கள் இயைபுடைய வேதன அளவுத் திட்டத்தின் IV ஆம் வேதன அளவு நிலையை எய்துவதற்கு முன்னர் முதலாவது வினைத்திறன் காண் தடைப்பரீட்சையிலும் சித்தியடைதல் வேண்டும்.

5. **வயதெல்லை.**- (i) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி அன்று வயது 21 இற்குக் குறையாமலும் 35 இனை விஞ்சி விடாமலும் இருத்தல் வேண்டும் (உச்ச வயதெல்லை ஏலவே அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு ஏற்புடையதாகாது) ;

(ii) விண்ணப்பக்காரர் அனைவரும் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(iii) தேகாரோக்கியமுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

6. **கல்வித் தகைமைகள்.**- விண்ணப்பம் கிடைக்கப்பெறும் இறுதித் திகதியன்று கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும். க. பொ. த. (உ. த.) பரீட்சையில் தூயகணிதம், பிரயோக கணிதம், பௌதீக விஞ்ஞானம், இரசாயன விஞ்ஞானம், புள்ளிவிபரவியல், உயிரியல் விஞ்ஞானம், விவசாயம் போன்ற

பாடங்களில் இரண்டு பாடங்கள் உள்ளடக்கப்பட்டு மொத்தமாக மூன்று பாடங்களில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும்.

அத்துடன்

வெலிசறை/ அனுராதபுரம்/ குண்டசாலையில் அமைந்துள்ள இலங்கை கால்நடை வளர்ப்பு பாடசாலை ஒன்றில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட இரு வருட டிப்ளோமாச் சான்றிதழைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- விண்ணப்பம் பெற்றுக்கொள்ளப்படுகின்ற முடிவுத் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும். பெறுபேற்றினை எதிர்பார்த்து சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

7. **ஆட்சேர்ப்பு முறைமை**.- ஆரம்பத் தகைமைகளைப் பெற்றிருக்கும் விண்ணப்பக்காரர் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தி னூடாக நடாத்தப்படுகின்ற பொதுப் போட்டிப் பரீட்சையில் அமர்தல் வேண்டும்.

(i) பொதுப் போட்டிப் பரீட்சைக்குரிய அனைத்து வினாப்பத் திரத்திலும் 50% புள்ளிகளை அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றுக்கொள்கின்ற விண்ணப்பக்காரர் நேர்முகப் பரீட்சைக்கு திறமை அடிப்படையில் அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சைக்காக எவ்வித புள்ளிகளும் வழங்கப்பட மாட்டாது. தகைமைகளை உறுதி செய்து கொண்டு விண்ணப்பக்காரர் பரீட்சையின்போது பெற்றுக்கொள்ளப் பட்ட மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் திறமை ஒழுங்கில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

***பரீட்சை :***

(i) இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலங்களில் நடாத்தப்படும்.

(ii) விண்ணப்பக்காரர் தான் விரும்பும் மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்றலாம்.

(iii) பரீட்சையின்போது மொழிமூலத்தினை எக்காரணம் கொண்டும் மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

(iv) பரீட்சைக் கட்டணம்.- ரூபா 300. கால்நடை உற்பத்தி, சுகாதார பணிப்பாளர் நாயகத்தின் பெயரிற்கு வழங்கப்படுகின்ற, பேராதனையில் அமைந்துள்ள தபால் கந்தோரில் மாற்றத் தக்கவாறு பெற்றுக்கொள்ளப்பட்ட காசுக்கட்டளையினை உரிய இடத்தில் ஒட்டி அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

(v) பரீட்சைப் பாடங்கள்.- பரீட்சை இரண்டு வினாத்தாள்களைக் கொண்டது.-

(அ) விவேகப் பரீட்சை ;

(ஆ) தொழில்நுட்பவியல் பரீட்சை.

(vi) பாடத்திட்டம் :

(அ) விவேகப் பரீட்சை (நேரம் : 1 மணித்தியாலம்) - மொத்தப் புள்ளிகள் 100.

இதில் விண்ணப்பக்காரர் தர்க்கரீதியாக சிந்திக்கும் ஆற்றல் அவரது சிந்தனையின் பகுப்பாய்வு அம்சங் கள், தீர்மானம் எடுக்கும் திறன், சீர்தூக்கிப் பார்க்கும் வல்லமை என்பன அடங்கலான வினாக்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

(ஆ) தொழில்நுட்பவியல் (நேரம் : 1 மணித்தியாலம்) - மொத்தப் புள்ளிகள் 100.

இவ்வினாப்பத்திரத்தில் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டிக்கும் :-

(i) இலங்கையில் விவசாய மற்றும் கால்நடைத் துறைக்கு கிடைக்கப்பெறும் வளங்கள் அதன் சிறப்பம்சங்கள் தற்போதைய நிலைமை மற்றும் பொருளாதாரத்திற்குள்ள பங்களிப்புக்கள்.

(ii) இலங்கை கால்நடை உற்பத்தி துறையில் உற்பத்தி அளவு மற்றும் சந்தைப்படுத்தல் முறைமை கால்நடை வளர்ப்பின் பங்கு, அவற்றின் இடஅமைவு மற்றும் பரம்பல்.

(iii) பண்ணை விலங்குகளின் இனப்பெருக்கத்தின் பொருட்டு பயன்படுத்தப்படும் முறைமைகள்.

(iv) தொற்றும் விலங்கு நோய்கள், விலங்கு நோய்களின் கட்டுப்பாடு, நோயுற்ற விலங்கு களின் எச்சங்களை சேகரித்தல் மற்றும் கொண்டு செல்லுதல்.

(v) ஒன்றிணைந்த பண்ணை முறைமையின் மீள் பயன்பாட்டு முறைமைகள்.

(vi) கால்நடை வளர்ப்பு மற்றும் அது சார்ந்த கைத்தொழில் பால் தயாரிப்பு, இறைச்சி தயாரிப்பு, கால்நடை உணவு உற்பத்தி.

(vii) கால்நடை வளர்ப்பு செயன்முறையுடன் தொடர்புற்ற வருமான செலவினங்களைக் கணிக்கும் ஒழுங்கு முறை, கணக்குப் பகுப்பாய்வு, விலங்குப் பண்ணைத் திட்டம்.

(viii) விஞ்ஞான தகவல்களை பரப்புதல் அவற்றின் ஆக்கத்திறன் தொடர்புற்ற முறைமைகளின் பிரயோகம்.

9. **விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படும் முறை**.- (i) இவ்வறி வித்தலுக்கு அமைவாக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய 8 1/2" x 12" அளவிலான A4 கடதாசியில் இரு பக்கங்களினையும் பிரயோகித்து தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் 2010.12.31 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கத்தக்கவாறு "பணிப்பாளர் நாயகம், கால்நடை உற்பத்தி, சுகாதாரத் திணைக்களம், த. பெ. இலக்கம் 13, கெட்டம்பே, பேராதனை" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பத்தை உள்ளிட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கால்நடை வள அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை" எனும் வாசகம் தெளிவாக எழுதப்படுதல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**குறிப்பு**.- (i) அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பக்காரர் தமது விண்ணப்பங்களைத் திணைக்களத் தலைவரினூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

(ii) சகல தேவைப்பாடுகளையும் பூரணப்படுத்தப்படாத விண்ணப் பங்கள் நிராகரிக்கப்படும். தபாலிடுகையின்போது விண்ணப்பங்கள் காணாமல் போதல் அல்லது தாமதமாகி விடுதல் போன்ற எவ்வித முறைப்பாடுகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(iii) விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. விண்ணப்பக்காரருக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் பரீட்சை ஆரம்பிப்பதற்கு 4 நாட்களுக்கு முன்னர் கிடைக்கப்பெறாதவிடத்து பின்வரும் விபரங்களுடன் உடனடியாக கால்நடை உற்பத்தி சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்துடன் தொடர்பு கொள்க :-

(அ) விண்ணப்பகாரரது முழுப்பெயர் ;
(ஆ) முகவரி ;
(இ) விண்ணப்பம் தபாலிலிட்ட திகதி, பதிவு இலக்கம், தபாற் பணிமனை.

10. விண்ணப்பக்காரர் பின்வரும் ஆவணங்களின் ஒளிப்பிரதியினை (photo copy) விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும் :-

(அ) பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் ;
(ஆ) கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் ;
(இ) கால்நடை வளர்ப்பு டிப்ளோமா சான்றிதழ்.

**விண்ணப்பக்காரரது ஆளடையாளம்.-** பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பக்காரர் யாவரும் பரீட்சை நிலையத்தில் தமது ஆளடையாளத்தினை பரீட்சை நிலைய பொறுப்பதிகாரி திருப்தியுறும் வகையில் உறுதிப்படுத்துதல் வேண்டும். அதன்பொருட்டு பின்வருவன ஏற்றுக்கொள்ளப்படும் :-

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(ஆ) ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய கடவுச்சீட்டு.

**பிழையான தகவல்களை வழங்குதல்.-** இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பக்காரர் உரிய தகைமைகளைக் கொண்டிராமை கண்டுபிடிக்கப்பட்டால் பரீட்சைக்கு முன்னர், பரீட்சையின்போது அல்லது பரீட்சையின் பின்னர் எச்சந்தர்ப்பத்திலாயினும் அவருடைய விண்ணப்ப தகைமையினை இரத்துச் செய்யப்பட இடமுண்டு. விண்ணப்பகாரர் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் ஏதாவது பிழையானது என தெரிந்திருந்தும் சமர்ப்பித்து இருப்பாராயின் அவர் சேவையில் நின்றும் நிறுத்தப்படுவதற்கு இடமுண்டு.

இவ்வர்த்தமானி பத்திரிகையில் பகுதி I : தொகுதி (II அ) வின் ஆரம்பத்தில் காட்டப்பட்டுள்ள அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடையதாகும் பொது நிபந்தனை மற்றும் பரீட்சார்த்திகளுக்கான விதிகள், அறிவுறுத்தல்கள்பால் உங்கள் கவனத்தை ஈர்ப்பதுடன் அவற்றினை பின்பற்றவும் வேண்டும்.

11. இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதாவது விடயம் தொடர்பில் பிரச்சினைகள் ஏற்படுமாயின் அது தொடர்பிலும் பரீட்சையின் ஊடாக ஆட்சேர்ப்பு செய்யப்படும் எண்ணிக்கை போன்றவற்றில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் கால்நடை உற்பத்தி சுகாதார சேவை பணிப்பாளர் நாயகத்திற்கே உரியதாகும். அதுவே இறுதித் தீர்வாகும். (கால்நடை வள அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை பற்றிய மொத்த விபரம் 2005.09.14 ஆந் திகதி வெளியிடப்பட்ட 1403/23 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ளன.)

(பேராசிரியர்) ஏ. டி. என். சந்திரசிறி,
கால்நடை உற்பத்தி, சுகாதார
பணிப்பாளர் நாயகம்.

கால்நடை உற்பத்தி, சுகாதார திணைக்களம்,
பேராதனை,
2010.10.25.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கால்நடைவள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு**

**கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்**

*இலங்கை கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் II ஆம் வகுப்பு "ஆ" தரத்திற்கு கால்நடைவள அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி க்கான விண்ணப்பம்*

[ ]
அலுவலக உபயோகத்திற்கு

| பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் | |
|---|---|

(உரிய இலக்கத்தை அடைப்பில் எழுதுக)

சிங்களம் - 02
தமிழ் - 03
ஆங்கிலம் - 04

1. பெயர் :-
   1.1 முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) :-----.
   (உதாரணம் SILVA, B.A.)
   1.2 முழுப் பெயர் (தமிழில்) :-----.
   1.3 தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2. முகவரி :-
   2.1 தனிப்பட்ட :-----.
   2.2 அலுவலக :-----.
   2.3 தபால் முகவரி :-----.

3. 3.1 பால் (உரிய அடைப்பில் அடையாளம் இடுக) :-

ஆண் [ ]
பெண் [ ]

3.2 பிறந்த திகதி :-

ஆண்டு [ ][ ][ ][ ] மாதம் [ ][ ] திகதி [ ][ ]

3.3 விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுத் திகதியன்று வயது :-

வருடங்கள் [ ][ ] மாதங்கள் [ ][ ] நாட்கள் [ ][ ]

3.4 குடியியல் நிலை
(உரிய அடைப்பில் அடையாளம் இடுக) :

விவாகமானவர் : [ ]
விவாகமாகாதவர் : [ ]

4. கல்வித் தகைமைகள் :-----.

4.1 க. பொ. த. (சா. த.) பரீட்சை :-

வருடம் :-----. மாதம் :-----.

| விடயம் | பெற்ற தரம் | சுட்டெண் |
|---|---|---|
| | | |

4.2 (அ) கால்நடை வளர்ப்பு டிப்ளோமா பெறப்பட்ட நிறுவனம் :-----.

(ஆ) கால்நடை வளர்ப்பு டிப்ளோமா பெற்ற திகதி : -----.

5. தற்போதைய தொழில் மற்றும் முன்னைய நியமனங்கள் (இருப்பின்) மாத்திரம் :-----.

| பதவி | நிறுவனம் | முதல் | வரை |
|---|---|---|---|
| | | | |

6. பரீட்சைக் கட்டணம் செலுத்திய தபால் பணிமனையின் பெயர் : -----.

காசுக்கட்டளை இலக்கம் :-----.

> பரீட்சைக் கட்டணமாக 300 ரூபாவினை தீவின் எந்தவொரு தபால் பணிமனையிலும் செலுத்தி 'கால்நடை உற்பத்தி, சுகாதார பணிப்பாளர் நாயகம்' எனும் பெயரில் செலுத்தவும்.
> மாற்றக்கூடிய பணிமனை – பேராதனை
>
> பற்றுச்சீட்டினை இங்கு கழறாதவாறு ஒட்டவும்.

7. இவ்விண்ணப்பத்தில் என்னால் முன்வைக்கப்பட்ட விடயங்கள் உண்மையானதும் சரியானதும் என்பதை உறுதியுரைக்கின்றேன். இங்கு தரப்பட்டுள்ள விபரங்களில் ஏதாவது உண்மையற்றது அல்லது பிழையானது என நான் தெரிவுசெய்வதற்கு முன் அறியப்படுமிடத்து நான் தகைமையற்றவனாகுவதுடன், தெரிவு செய்த பின்னர் அவ்வாறு தெரியப்படுமிடத்து எத்தகைய நட்டஈடும் வழங்கப்படாது சேவையில் இருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

-----,
விண்ணப்பக்காரரது கையொப்பம்.

திகதி :-----.

(தற்போது அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு மாத்திரம்)

**திணைக்களத் தலைவரினது சான்றிதழ்**

இத்திணைக்களத்தில் ................................... ஆக சேவை புரியும் திரு./திருமதி/செல்வி ...................................... என்பவரினால் மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் பரீட்சிக்கப்பட்டது எனவும் அவை சரியானது எனவும் இவ்வுத்தியோகத்தர் மேற்குறிப்பிடப்பட்ட பதவியின் பொருட்டு தெரிவுசெய்யப்படுமிடத்து அவர் தற்போது வகிக்கும் பதவியில் இருந்து விடுவிப்புச் செய்ய முடியும்/முடியாது எனவும் சான்றுபடுத்துகின்றேன்.

-----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
(அலுவலக முத்திரை)

பதவிப் பெயர் :-----.
முகவரி :-----.
திகதி :-----.

3-590